

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
வாழாப்பத்து
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் வாழாப்பத்து

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

1. பற்றற்ற வாழ்வும் முக்தியும்
2. பற்றும் யோக வாழ்க்கையும்
3. உருகிப் உருகி உளம் குளிர
4. அருள் அனுவம்
5. இறைநிலை என்னுள்ளே
6. அனுபூதி நிலை
7. நீ நானாகக் கண்டேன்
8. பற்று அற்ற வாழ்வுக்கு வழி
9. தவமும் பரவச நிலையும்
10. வாழப் பிடிக்கவில்லையா?

இறைவன் தன்னை அழைத்துக் கொள்ளா விட்டால் வாழப் போவதில்லை என்று, வாழாப் பத்து என்ற தலைப்பில் 28 ஆவது பதிகத்தில் பத்து பாடல்களை மாணிக்கவாசகர் பாடியுள்ளார்.

## 1. பற்றற்ற வாழ்வும் முக்தியும்

அன்னை காளி மாதாவின் தரிசனம் பெற வேண்டுமென்ற ஆவலும் ஏக்கமும் இராமகிருஷ்ணரிடம் நாளுக்கு நாள் பெருகின.

அன்னையின் வழிபாட்டில் மனமுருகிக் கரைந்தார். பூஜை நேரங்களில் பக்திப் பாடல்களை குறிப்பாக "ராம பிரசாதர்" என்ற மகானின் பாடல்களைப் பாடிப் பேரானந்தம் அடைந்தார்.

அவர் பாடுவதைக் கேட்டு பக்தர்களும் பக்தியில் மெய்சிலிர்த்து நின்றார்கள்.

தலைமீது புஷ்பங்கள வைத்த வண்ணம் மணிக்கணக்காக தியானத்தில் மூழ்குவார்.

காளி மாதாவுக்கு நிவேதனம் படைத்து அதனை அன்னை உண்ண வருவாள் என்று காத்திருப்பார்.

கோவிலின் மரபுகளையும் நியதிகளையும் மீறி நேரம் காலம் அறியாமல் பூஜை செய்தும் பாடியும் அலங்காரம் செய்தும் தீபாராதனை காட்டியும் அழுதும் தொழுதும் இராமகிருஷ்ணர் அன்னையை வழிபட்டு வந்தார்.



"கல்லும் கனிய உன்முன் பாடுகின்றேனே, என்முன் காட்சிதர வரமாட்டாயா?" என்று அவர் கனிந்து உருகி வேண்டினார்.

கண்களில் நீர் பெருகி வழிபட்டார். அன்னையின் அருட்காட்சி கிடைக்காமல் போய்விடுவோமோ என்ற தவிப்பும் துயரமும் பெருகியதும் இனி உயிர் வாழ்வதே வீண் என்ற முடிவுக்கு வந்தார் இராமகிருஷ்ணர்.

இந்த எண்ணம் வந்ததுமே காளியின் அருகில் இருந்த வாளை எடுக்க விரைந்தார். காளியின் வாளைத் தம் கரங்களால் தொட்டார்.

அவ்வளவுதான். ஆனால்...என்ன வியப்பு! இராமகிருஷ்ணரின் முன்பு அன்னை ஒளிமயமாகத் தோன்றினாள்.

“கங்குகரையற்ற ஞானப் பேரொளிக் கடல் போன்ற தோற்றம். எங்கு நோக்கினாலும் ஒலி அலைகள் கொந்தளித்துப் பொங்கிப் பெருகிய கடல் மட்டுமே தெரிந்ததாக இராமகிருஷ்ணர் பின்னாளில் சீடர்களிடம் இதைப் பற்றி நிகழ்ந்ததை வர்ணித்தார்.

வாளைத் தொட்டதும் அன்னையின் அருங்காட்சித் தான் பெற்றதும் அக்கணமே இராமகிருஷ்ணர் வெளியுலக நினைவிழந்து வீழ்ந்தார். பரவசமானார். அன்னை அருளில் திளைத்தார்.

இராமகிருஷ்ணரைப் போல மாணிக்கவாசகரும் “இறையருள் கிடைக்காவிடில் இனியும் வாழமாட்டேன். வருக, என்று அழைத்து அருளுவாயாக!” என்று வாழாப் பத்தில், பத்துப் பாடல்களிலும் வேண்டுகிறார்

“பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
    பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே
    திருப்பெருந் துறை உறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்து உரைக்கேன்
    ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
    வருகஎன்று அருள் புரியாயே.” (திருவாசகம் பா.448)

- நிலம் முதல் ஆகாயம் வரை உள்ள ஐம்பூதங்களிலும் விரிந்து நிற்கும் எம் மேலானவனே!
- சிறப்புப் பொருந்திய சிவபுரத்துக்கு அரசனே!
- திருப்பெருந் துறையில் எழுந்தருளி இருக்கும் சிவனே!
- நான் எதன்மீதும் பற்று இல்லாதவனாய் இருக்கிறேன்.
- முன்பு என்னை ஆட்கொண்ட நீ, இப்பொழுது அருள் செய்யாது இருக்கிறாய். இதை யாரிடம் எடுத்துக் கூற முடியும்?
- இதற்காக யாரை நொந்து கொள்ள முடியும்?
- நீண்ட கடலால் சூழப்பட்ட உலகில் நான் இனியும் வாழமாட்டேன். வருக, என்று அழைத்து அருளுவாயாக!

## இறைநிலை பெற – வேதாத்திரியம்

“இறையுணர்வார் சிலர்முயன்று வேதநூல்கள் மூலம்
இவ்விறையே அறிவுஎன உணர முடியாமல்,
இறைவேறாய் அறிவுவேறாக எண்ணி எண்ணி,
எழும்பிணக்கில் புரட்டுபுரண்டே மயக்கில் மாள்வார்.
இறைநிலையே அறிவாக இயங்கும் உண்மைகாண,
ஏற்றதொரு சாதனைதான் அகநோக்குப் பயிற்சி.
இறையறிவாய் உலகாக உயிர்களாகத் திகழும்
இந்தஉண்மை உயிர்மீது மனம் ஒடுங்க ஒளிரும்.” (ஞாக.பா.1407)

இறைநிலையை அறிய வேண்டும் என்ற எண்ண எழுச்சி மனிதராகப் பிறந்தவர்க்கு ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படுவது இயல்பு.

அவ்வாறு சிலர் தன்னை அறிய வேண்டும். கடவுள் தத்துவத்தை அறிய வேண்டும் என்று முயற்சிப்பார்கள்.

வேத நூல்களைப் படித்தும். இறைநிலையே, அறிவாகவும், தானாகவும் இருக்கிறது என்பதை உணர முடியாமல், இறை நிலையையும் அறிவையும் வேறு வேறாக எண்ணி, அறிவிற்குப் பொருந்தாத வகையில், மனம் பிணக்கமடைந்து, மயக்குற்று அலைந்து திரிந்து மடிந்தும் போவார்கள்.

இறைநிலையானது அறிவாகவும் உள்ளது என்ற உண்மையை உணர்வதற்கு உகந்த சாதனை மார்க்கம் தான் அகநோக்குப் பயிற்சியாகிய குண்டலினி யோகம் ஆகும்.

மனதின் அலைச்சுழல் வேகத்தைக் குறைப்பதற்கு உயிரில் மனதை ஒடுக்க வேண்டும்.

அந்நிலையில் இறைநிலையே அறிவாகவும், உலகங்களாகவும், உயிர்களாகவும் திகழ்கின்றது என்னும் உண்மையை உணர்வதால் அறிவில் தெளிவு ஏற்படும்.

இத்தகைய தெளிவைப் பெற்று ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 2. பற்றும் யோக வாழ்க்கையும்

'**எ**ந்தப் பொருள் மீது மனிதனுக்கு அளவற்ற ஆர்வம் ஏற்படுகிறதோ, அந்தப் பொருளால் அடையக் கூடிய துன்பங்களை, முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அப்போதுதான் அந்தப் பொருளின் மேல் ஏற்படும் பற்றின் வலிமை குறையும் கடலில் மிதக்கும் இரண்டு கட்டைகள் ஒரு கணத்தில் ஒன்று சேரும்; மறுகணமே ஒன்றையன்று விட்டு விலகும்.

சேரும் உறவுகள் ஒரு நாள் பிரியும். இல்லாதிருந்து, ஒரு நாள் உறவாய் மலர்ந்து, மீண்டும் இல்லாமல் போவதுதான் வாழ்க்கை.

இந்த வாழ்க்கையில் அளவுக்கு மீறிய பற்றை வளர்த்துக் கொள்ளலாகாது. குவிந்த செல்வம் குறைந்து போகும்.

உயர்ந்த வாழ்வு தாழ்ந்து போகும். சேர்ந்த சுற்றம் பிரிந்து போகும். பற்றுகளில் இருந்து விடுபட மனிதன் மனதை பக்குவப்படுத்த வேண்டும்' என்கிறது மகாபாரதம்.

'பொருட்களின் மீதான பற்றை விடுங்கள். செல்வமோ, அதிகாரமோ மனிதனை அடிமைப்படுத்தி விடாது. அவற்றின் மீதிருக்கும் நீங்காத ஒட்டுதல்தான் ஒருவனை நிரந்தர அடிமையாக்கி விடுகிறது' என்றார் புத்தர்.

பற்றற்று இருத்தல், பயமற்று இருத்தல், சினமற்று இருத்தல் ஆகிய மூன்று பண்பு நலன்கள்தான் பகவத் கீதையின் அடிநாதம்.
'அச்சம், சினம் ஆகிய இரண்டுக்கும் அடித்தளமே பற்று' என்ற உண்மையை நாம் உணர வேண்டும்.

ஒரு பொருளின் மீது முதலில் பார்வை பதிந்ததும் மனதில் ஆசை அலையடிக்கும். ஆசையின் வேகம் பெருகி, பற்றாய்ப் பரிணமிக்கும்.

அதன்பின் அந்தப் பொருளை தன்னுரிமையாக்கத் துடிக்கும் வேட்கை அதிகரிக்கும். அது தனக்கு கிடைத்தே ஆக வேண்டும் என்ற தவிப்பில் மனம் உறக்கமின்றிப் பதை பதைக்கும்.

ஒரு வேளை விரும்பிய பொருள் கிட்டாது போய்விடுமோ என்ற ஏக்கம் உயிரை வாட்டும்.

கிடைத்தாலும் கூட என்றேனும் அது கை நழுவி விடுமோ என்ற ஓயாத அச்சத்தில் மனம் கவலை கொள்ளும்.

இந்தக் கவலையே கோபமாக உருமாறும். கோபம் பகையை உருவாக்கும். முடிவில் மனம் நிம்மதியை இழக்கும். பற்றற்றவருக்குப் பயமில்லை.

பயமற்றவர்க்குச் சினமில்லை. அதனால்தான் பகவத் கீதை பற்றற்ற பற்றை (detached attachment) வாழ்வில் வலியுறுத்துகிறது.

மயானத்தில் முனிவர் ஒருவர் தவம் புரிந்தார். அவருடன் சீடன் ஒருவனும் தவத்தில் ஈடுபட்டான்.

ஒரு நாள் நள்ளிரவில் சீடனைத் தனியாகத் தவத்தில் இருக்கச் செய்து, முனிவர் தனது குடிலுக்குள் ஓய்வு எடுத்தார்.

சிறிது நேரத்தில் சீடன் முனிவர் முன் வந்து நின்றான். ''ஏன் இவ்வளவு விரைவில் திரும்பிவிட்டாய்?'' என்ற முனிவரிடம், ''மயானத்தில் தனியே இருக்க பயமாக இருக்கிறது'' என்று தயங்கியபடி சொன்னான் சீடன்.

''வேதம் படித்த நீ பயப்படலாமா? உன் சரீரத்தில் நீ வைத்திருக்கும் பற்றுதான் உன்னுள் பயத்தை வரவழைத்தது. அழியக் கூடிய நிலையற்ற பொருட்களின் மீது பற்று வைத்தவன், அழியாத

சத்தியத்தை அடைய முடியாது என்று கடோபநிஷதம் கூறுவதை அறியவில்லையா நீ?'' என்றார் முனிவர்.

சரீர சுகத்தில் நாம் வைக்கும் எல்லையற்ற பற்றுதான் எல்லாவித துன்பங்களுக்கும் மூல காரணம்!

"மற்றுநான் பற்றிலேன் கண்டாய்" என திருவாசகம் பாடுகிறது.

"வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
 மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்கு
 உணர்வு இறந்து உலகம் ஊடுருவும்
செம்பெருமானே சிவபுரத்து அரசே
 திருப்பெருந் துறை உறை சிவனே
எம்பெருமானே என்னைஆள் வானே
 என்னைநீ கூவிக் கொண்டு அருளே." (திருவாசகம் பா.449)

- தேவர்களாலும் அறிய முடியாத ஒரு முதல்வனே!
- அயன்மால் இருவரது அறிவையும் கடந்து, எல்லா உலகங்கள் உள்ளும் ஊடுருவி நின்ற செம்மேனிப் பெருமானே!
- சிவலோகத்துக்கு அரசனே!
- திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் சிவனே!
- எனது தலைவனே!
- என்னை ஆள்பவனே!
- விண்ணாகிய என்னை ஆட்கொண்ட பெரிய மாணிக்க மணியே!
- நான் இங்கு ஒரு பற்றும் இல்லாதவனாய் இருக்கிறேன். என்னைக் கூவி அழைத்து அருளுவாயாக!

## பற்றற்ற வாழ்க்கை – வேதாத்திரியம்

"இனம்சாதி, தேசம்மொழி, மதம் பற்றற்று
 இயற்கையமைப்பு அறிவுநிலை அறிந்த, மேலாம்
மனிதனென்ற ஒருநினைவில், பாசம் பற்றை
 மறந்து தொண் டாற்றி பிறர் துன்பம் தீர்க்கும்

புனிதஉள்ளம் செயலுடையோர் எண்ணிறந் தோர்.
புவிமீது அதிகரிக்க அதி கரிக்க
கனிவுமிகும். அருள்பெருகும். சமுதா யத்தின்
களங்கங்கள் மறைந்துவிடும். உலகம் உய்யும்." (ஞாக.பா.422)

மனித வாழ்வின் நோக்கம் இனிமையாக வாழ்வது ஆகும்.

இயற்கைக்கு முரண்பட்டும் சமுதாய உணர்வு இன்றியும் வாழ்ந்து பல லட்சக்கணக்கான பிறவிகளைத் தாண்டி வந்துள்ள மனிதகுலத்திலே இனிமை இல்லை.

ஆறாவது அறிவு என்னும் உண்மைப் பொருள் மேன்மைப் பொருளான மனமாக மலர்ந்துள்ளது என உணர்ந்து, தானும் இனிமையாக வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்க கூடிய தனது தெய்வீகப் பண்பை மனிதன் மறந்து. சுயநல நோக்கத்தோடு, இனம் என்றும் சாதி என்றும் தேசம் என்றும் மொழி என்றும் மதம் என்றும் எல்லைக் கட்டிய மனதினால் பாசம் பற்றுக்களில் சிக்கிக் கொண்டுள்ளான்.

இயற்கையின் அமைப்பையும், இயக்க ஒழுங்கையும், செயல் விளைவு நியதியையும் அறிந்து, அந்த இயற்கையின் ஒரு பகுதி அறிவு தன்னில் இருப்பதை உணர்ந்து, எல்லா சீவ இனங்களிலும் உயர்ந்த சீவனாக மனிதனாக இருப்பதையும் உணர வேண்டும்.

அந்த உணர்வில், மன விரிவின் காரணமாக பாசம் பற்று என்பவைகள் மறந்து பிறர் துன்பம் தீர்க்கும் செயல்கள் மலரும். தூய்மையான எண்ணம், சொல் செயலுடையவர்கள் நிலவுலகில் அதிகரிக்க அதிகரிக்க, அன்பு மிகுதியாகும்.

கருணையால் செயல்கள் அதிகமாகும். சமுதாயக் குற்றங்கள் மறைந்து உலகம் நற்கதி பெறும்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 3.உருகிப் உருகி உளம்குளிர

துறவி ஒருவர் ஆற்றில் மூழ்கி தவம் செய்து கொண்டிருந்தார்.

ஒரு இளைஞன் குறுக்கிட்டு “ஐயா நான் தங்களின் சீடனாக சேர விரும்புகிறேன்” என்றான்.

ஆற்றிலிருந்து எழுந்தவர், “ஏன்?” என்றார் துறவி.
“நான் கடவுளை அறிய விரும்புகிறேன்” என்றான்.

சட்டென்று துறவி அவன் கழுத்தின் பின்புறத்தைப் பிடித்து இழுத்து, அவன் தலையை ஆற்றினுள் முக்கினார்.

சிறிது நேரத்தில் மூச்சிறைத்த இளைஞன், திமுறிக் கொண்டு வெளியே வரத் துடித்தான்.

கடைசியாக துறவி அவனைப் பிடித்து வெளியே இழுத்தார்.

வெளியில் வந்த இளைஞன் இருமிக் கொண்டு பெரு மூச்செறிந்தான்.

துறவி கேட்டார், நீ நீரினுள் மூழ்கி இருக்கும் போது உனக்கு என்ன தேவைப் பட்டது?” என்றார்.

“காற்று” என்றான் இளைஞன்.

“நல்லது, வீட்டுக்குச் செல். காற்று போல கடவுள் உனக்கு எப்போது தேவையோ அப்போது திரும்பி வா” என்று சொல்லி விட்டார்.

ஜென் ஞானி சொன்னதைப் போல் மாணிக்கவாசகரும் உருகி உருகி இறைவன் அருள் பெற வேண்டுகிறார்.

“பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந் துறை உறை சிவனே
ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை
உணர்த்துவது உனக்குஎனக்கு உறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே.” (திருவாசகம் பா.450)

- சிவலோகத்தது அரசனே!
- திருப்பெருந் துறையில் எழுந்தருளி இருக்கும் சிவனே!
- நீ என்னைத் தேடி வந்து ஆட்கொண்டாய்.
- திருமால் பாடிப் புகழும் நின் திருவடியின் மீது வைத்த பற்று தவிர வேற ஒரு பற்றும் இல்லாதவனாய் இருக்கிறேன்.
- பிணக்கம் கொள்வதும் பின்னர் கூடி மகிழ்வதும் உன்னோடுதான்.
- உன்னை நீ, எனக்கு உணர்த்தப் போவது உறுதி.
- வாட்டம் அடைந்து வாழ முடியாதவனாய் இருக்கிறேன்.
- என்னை வருக என்று அழைத்து அருளுவாயாக!

## இறைஉணர்வும் உயிர் உணர்வும் – வேதாத்திரியம்

“இறையுணர்வும் உயிருணர்வும் அறிவறியும் பேறும்
யான்பெற்று உய்வதற்கு அகத்தவத்தில் ஆழ்ந்தேன்.
முறையாக ஒவ்வொன்றும் முழுமையாய் உணர்ந்தேன்.
மூலமான இருப்பு சுத்தவெளி இறைவனாயும்,
நிறைநிலையின் நுண்பகுதி விண்உயிராய், அதனின்
நிகழச்சிஅலை நெடுவெளியில் சேர்ந்த காந்தமாகி,
மறைபொருளாய் உயிர் மையத்தமைந்த இருப்பறிவாய்,
மற்றுமதன் படர்க்கைநிலை மனமென உணர்ந்தேன்.”
(ஞாக.பா.742)

இறைநிலை உணர்வு பெறவும், உயிர் உணர்வு பெறவும், அறிவினை அறிவதற்கான வழிகளையும் அடைந்து நான் வாழவேண்டும் என்ற நோக்கத்தில் அகத்தவமாகிய குண்டலினி யோகத்தில் ஆழ்ந்தேன்.

ஒவ்வொன்றைப் பற்றியும் முறையாகவும் முழுமையாகவும் உணர்ந்தேன்.


தோற்றம், மாற்றம், முடிவு ஆகிய அனைத்திற்கும் மூலமான இருப்பு சுத்தவெளியே இறைநிலை என்பதை உணர்ந்தேன்.

நிறைவான, நிலையான சுத்தவெளியின் நுண்பகுதியாகிய விண் உயிராக இயங்குவதை உணர்ந்தேன்.

விண் சுழற்சியால் உருவாகும் விரிவலை சுத்தவெளியாகிய நீண்ட வெளியல் சேர்ந்து. தள்ளல் – கொள்ளல் என்ற காந்த அலையாகி, மறைபொருளாக உயிர் மையத்தில் இருப்பாக அமைந்திருப்பதை அறிவாகவும் உணர்ந்தேன்.

மேலும் உயிரின் இயக்கமாகிய படர்க்கை நிலையில் மனமாக இருப்பதையும் உணர்ந்தேன்.

இருப்பு சுத்தவெளியே இறைநிலை, அதன் தன்மாற்ற நுண்பகுதியான விண், உயிர், உயிர் சுழற்சியால் ஏற்படும் காந்தம் உயிர் மையத்தில் அறிவாகவும், படர்க்கை நிலையில் மனமாக இயங்குவதையும் உணர்ந்தேன்.
திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
குயில் பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அருட்பத்து

வேதாந்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அற்புதப் பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அன்னைப்பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
கண்ட பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவா சகத்தின்
குலாப்பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
சென்னிப் பத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
புணர்ச்சிபத்து

வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
ஆனந்த
பரவசம்

# 4. அருள் அனுவம்

“தட்சிணேஸ்வரத்தில் குருநாதருடன் பெரும்பான்மையான நேரத்தை நரேந்திரர் (விவேகானந்தரின்) செலவிட்டு வந்தார்.

ஆதம சாதனைகள் பலவற்றையும் செய்யலானார். வேதாந்த விசாரம், தியானம், பிரார்த்தனை என்று குருநாதரின் அருள் அனுபவங்களுக்குத் தம்மைத் தகுதியாக்கிக் கொண்டார் நரேந்திரர்.

ஆத்ம சாத கைளை ப் புரிந்து வந்த நரேந்திரரின் முன்னாள் எப்போதும் குருதேவர் காட்சியளித்த வண்ணம் இருந்தார். எங்கு சென்றாலும் குருதேவரின் தோற்றம் அவருடனே வருவதை நரேந்திரர் உணர்ந்தார்.

ஒருநாள் நரேந்திரர் உறக்கத்தில் இருந்தபோது கனவில் குருதேவர் தோன்றினார். அவருடைய அழைப்பை ஏற்று அவருடனே நரேந்திரர் சென்றார். கனவிலே தான்.

நரேந்திரருக்கு ராதையைக் காட்டுவதாக அழைத்துச் சென்ற குருதேவர் சற்றுத் தொலைவு சென்றதும் நின்றார்,

ராதையைத் தேடி எதற்காக வெகுதூரம் போக வேண்டும்? இங்கேயே இருக்கிறாள் என்றதும் நரேந்திரர் குருதேவரைத் திரும்பி நோக்கினார்.

அங்கே குருநாதர் இல்லை. அழகே வடிவான ராதையல்லவா நின்றிருந்தாள். நரேந்திரர் சுற்றுமுற்றும் குருதேவரைத் தேடினார்.

தெய்வ வடிவங்கள் உண்மையா? என்றெல்லாம் வினாத் தொடுத்து சந்தேகத்தை வெளிப்படுத்தி வந்த நரேந்திரரின் சந்தேகம் இந்தக் காட்சியைக் கண்டதும் அகன்றது.

அம்பிகையை நேரில் தரிசித்து ஞானம் பெற்ற நரேந்திரர், குருதேவர் கனவிலே வந்து உரைத்த விளக்கத்தால் மேலும் தெளிவடைந்தார்.

ஜீவாத்மாவுடன் பரமாத்மாவுக்கு உள்ள தொடர்பைப் புரிந்து கொண்டார்.

தாம்கண்ட கனவை மறுநாள் நண்பர்களிடம் கூறி, தமது கருத்தை நரேந்திரர் பகிர்ந்து கொண்டார்.

குருதேவர். நரேந்திரரை ஆத்ம சாதனையில் ஈடுபடுத்தும்போது இவ்வாறான பயிற்சிகளை அவருக்கு அளித்து வந்தார்.

நரேந்திரரைப் போல் மாணிக்கவாசகரின் அருள் அனுபவங்கள் தான் திருவாசகத்தின் பாடல்கள்.

"வல்லை வாளரக்கர் புரம் எரித்தானே
    மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லை வாழ் கூத்தா சிவபுரத்து அரசே
    திருப்பெருந் துறை உறை சிவனே
எல்லை மூவுலகும் உருவ அன்று இருவர்
    காணும்நாள் ஆதி ஈறு இன்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
    வருக என்று அருள் புரியாயே." (திருவாசகம் பா.451)

- தில்லையில் வாழும் கூத்தனே!
- சிவலோகத்துக்கு அரசனே!
- திருப்பெருந் துறையில் எழுந்தருளி இருக்கும் சிவனே!
- வாளைக் கையில் ஏந்தி, திரிபுரமாய் நின்ற அரக்கர்களை விரைந்து அழித்தவனே!
- அன்று இருவர் (மால், அயன்) காண முற்படும் போது மேல்கீழ் நடு என்று எல்லா உலகங்களிலும் ஊடுருவி முதலும் முடிவும் இன்றி விரைந்து வளர்ந்து நின்றவனே!
- இங்கு எனக்கு ஒரு பற்றும் இல்லை. நான் இங்கு வாழமாட்டேன். என்னை வருக என்று அழைத்து அருளுவாயகா!

## அருள் நிலையால் இறையுணர்வு பெறலாம் – வேதாத்திரியம்

"இறையுணர்வால் எவ்வுயிரும் ஒன்றென் றாகும்
ஈசனிலே தான். தன்னில் ஈசனான
இறையுணர்வே தத்துவத்தின் முடிந்த பேறு.
இப்பேறே அகத்தவத்தின்முடிவு மாகும். (வேதாத்திரியம்)

அருள்நிலையால் இறையுணர்வு பெற்ற விவேகானந்தரைப் போல் மாணிக்கவாசகரைப் போல் நாமும் இறையுணர்வு பெற்று வாழ்வோமாக.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.


வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
vazhga valamudan
MANNARGUDI BANUKUMAR FOUNDATION TRUST
MANNARGUDI BANUKUMAR
FREE PDF DIRECTORIES
With links to over 2,000 video and audio recordings on YouTube...
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

## 5. இறைநிலை என்னுள்ளே

பட்டினத்தாரின் பற்றற்ற வாழ்வே இறைநிலையை அடைய உதவியது.

கப்பல் கப்பலாய் திரவியம் கொண்டு வருவான் திரைகடல் ஓடிய மகன் மருதவாணன் என்று ரொம்பவும்தான் எதிர்பார்த்துக் காத்திருந்தார் திருவெண்காடர்.

ஆனால், மருதவாணன் கப்பல் நிறைய எரு மூட்டைகளையும் தவிட்டு மூட்டைகளையுமாகக் கொண்டு வந்ததைப் பார்த்து துக்கித்துப் போனார்.

ஆத்திரத்துடன் மகனைப் பிடித்தார். ‘‘என்ன இது?’’ என்று கோபம் கொப்புளிக்கக் கேட்டார்.‘‘பிரித்துப் பாரும்’’ என்று அலட்சியமாகச் சொன்ன மகன் அங்கிருந்து புறப்பட்டான்.

இத்தனைக்கும் மருதவாணன், திருவெண்காடரின் சொந்த மகனல்ல. வளர்ப்பு மகன்.

அவன்தான் இப்படிக் கப்பல் முழுக்க வரட்டியையும், தவிட்டு மூட்டைகளையும் கொண்டு வந்திருக்கிறான்! ஆத்திரமுற்ற திருவெண்காடர், ஒரு வரட்டியை எடுத்துத் தரையில் ஓங்கி அடித்தார்.

உள்ளிருந்து ரத்தினக் கற்கள் தெறித்து வந்து விழுந்தன. இப்படியே ஒவ்வொரு வரட்டியிலும்! தவிட்டு மூட்டை முழுவதிலும் பொன் துகள்கள்!

தம் வணிகப் பரம்பரையின் பெயர் விளங்க வந்த பிள்ளை என்ற உற்சாகத்தில் மகனைத் தேடிக் கொண்டு வீட்டிற்குப் போனார்.

அங்கே, மனைவி ஒரு துண்டுச் சீட்டைக் கொடுத்தாள். அதில் ‘காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே’ என்று

எழுதப்பட்டிருந்தது. அப்படி எழுதிக் கொடுத்துவிட்டு மருதவாணன் எங்கோ மாயமாய் மறைந்த வாணனாகி விட்டான்.

சுரீரென்றது திருவெண்காடருக்கு. உண்மைதானே! போகும்போது எதை எடுத்துச் செல்லப் போகிறோம்? உயிர் உடலை, நீங்கும் போது அதுவரை குடியிருந்த உடலையும் அப்படியே விட்டுவிட்டுத்தானே போகவேண்டும்?

வேறு எதைத்தான் அது கொண்டு செல்ல முடியும்? மனசிலிருந்த ஆசாபாசங்கள் கழன்று ஓட, உடலிலிருந்து ஆடைகளும் கழன்று வீழ்ந்தன.

நாகரிகம் கருதி கோவணம் மட்டுமே அணிந்த அவர், அன்றே மனைவி, உற்றார், உறவினர், சொத்து, திரவியம் அனைத்தையும் துறந்து வீட்டை விட்டு வெளியேறினார்.

துறவியாய்ப் போனவன் மீண்டும் சொத்து நாடி வரலாமோ என்ற ஐயத்துடன் அவருடைய ஒரே தமக்கை அவருக்கு விஷம் பொதிந்த பணியாரம் ஒன்றைத் தந்து அனுப்பினாள்.

சூட்சுமம் புரிந்து கொண்ட, இப்போது பட்டினத்தாராகிவிட்ட திருவெண்காடர், அந்த பணியாரத்தை தமக்கையின் வீட்டு ஓலைக் கூரை மீது எறிய, கூரை ‘குப்பென்று தீப்பற்றி எரிந்தது.

அதோடு, தனக்கும் தன்னுடைய சொத்துகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதை உறுதிபடுத்திவிட்டுப் புறப்பட்டு விட்டார்.

துறவிக்கு சொந்தமில்லை, பந்தமில்லை என்ற நியதியைத் தன் தாயைப் பொறுத்தவரை உடைத்தெறிந்தார் பட்டினத்தார்.

பந்தம் எல்லாவற்றையும் அறுத்தெறிந்தாலும் பூவுலக பந்தம் விட்டுச் செல்லும் தாய்க்கு மகன் இறுதிக்கடன் செய்ய வேண்டியது கடமை என்றுணர்ந்தார்.

அதனால்தான் யார் உதவியும் இல்லாமல் பச்சை வாழை மரங்களை எரிய வைத்து தாயின் சிதைக்கு தீ மூட்ட அவரால் முடிந்தது.

சென்னை திருவொற்றியூரில் கடற்கரை மணலில் உயிரோடு புதைந்து அப்படியே சமாதியாகி விட்டதாகவும், பிறகு சுயம்பு லிங்கமாக அவர் வெளியே வந்ததாகவும் கூறுகிறார்கள். பட்டினத்தார் ஜோதிமயமாக இறைவனுடன் ஐக்கியமானார் என்றும் சொல்வார்கள்.

"பண்ணினேர் மொழியாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந் துறை உறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்று இவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே." (திருவாசகம் பா.452)

- சிவலோகத்துக்கு அரசனே!
- திருப்பெருந் துறையில் எழுந்தருளி இருக்கும் சிவனே!
- பண் போன்ற இனிய சொற்களைப் பேசும் உமை பாகனாகிய உன்னைத் தவிர, எனக்கு இங்கு ஒரு பற்றும் இல்லை.
- நீ என்னை ஆட்கொண்டது உறுதி.
- என்னுடைய மனத்தையும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் உன்னிடத்தில் வைத்து விட்டு, இம்மண்ணுலகில் வாழ எனக்குப் பிடிக்கவில்லை. என்னை வருக என்று அழைத்து அருளுவாயகா!

## இறைநிலை என்னுள்ளே – வேதாத்திரியம்

"இறைநிலை என்னுள்ளும்,
யான்இறை நிலையுள்ளும்,
உறையும் உண்மையை,

உணர்ந்துணர்ந்தே மகிழ,
நிறைநிலை பெற்றபின்,
நினைப்பதும் உரைப்பதும்,
மறையெனப் போற்றியே
மக்கள் மகிழ்கிறார். (ஞாக.பா.1690)

இறைநிலை தன் நிலையில் மாற்றம் பெற்று, பிரபஞ்சத் தோற்றமாகி, ஓரறிவு சீவன் முதல் ஆறறிவு மனிதன் வரை மலர்ச்சி பெற்றுள்ளது.

இறைநிலையின் ஒரு பகுதியே நானுமாகி உள்ளது. எனக்குள்ளாக இறைநிலையும், இறைநிலைக்குளாக நானும் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

ஒரு கைப்பிடி பயறை தண்ணீரில் ஊறப் போட்டால், சிறிது நேரத்தில் தண்ணீருக்குள் பயறும், பயறுக்குள் தண்ணீரும் இருப்பதுபோல உணர்ந்து மகிழ்ச்சியுற்றேன்.

இறைநிலையே எல்லாமாக ஆகி நானுமாக ஆகியிருக்கிறது என்ற நிறைநிலை உணர்வு பெற்ற பின்னர். நினைப்பது, கூறுவது என்ற அனைத்துமே மறைபொருளாக உள்ள இறைநிலையேதான் என்று மக்கள் போற்றி மகிழ்கிறார்கள்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6. அனுபூதி நிலை

பகவான் ராமகிருஷ்ணர் கூறுகிறார்.

“சாதாரண மக்கள் இந்நிலையை அடைவதில்லை. எனக்கு ஏற்பட்ட ஆன்மீக வேகத்தில் கால்பங்கே மற்றவர்களின் உடலையும், உள்ளத்தையும் அழித்துவிடப் போதுமானது.”

இரவு பகலாக அன்னையின் ஏதாவது ஒரு காட்சி கிடைத்துக் கொண்டே இருந்தது. அப்பொழுது அன்னையின் காட்சி மட்டும் இல்லாதிருந்தால் இவ்வுடல் அழிந்து போயிருக்கும்.

ஆறு வருடங்கள் எனக்கு தூக்கமே இல்லை. கண்கள் இமைப்பதே இல்லை. எவ்வளவு முயன்றும் கண்களை மூடவே முடியவில்லை.

நேரம் போவதே தெரியாது. உடல் உணர்வுகள் அறவே இல்லை. அன்னையின் நினைவுகளிலிருந்து சிறிது நேரம் மீண்டாலும் பைத்தியம் பிடித்த நிலைக்கு வந்து விடுவேன்.

பயம் கவ்விக் கொள்ளும். ‘அம்மா’ என்று அலறுவேன். என்னை மட்டும் புறக்கணித்துவிடாதே, உன்னுடைய தரிசனத்தை எனக்குக் கொடு.

உன் கருணையை என் மீது காட்டு, உன் திருப்பாதங்களைச் சரண் அடைந்த எனக்கு வேறு கதி இல்லை என்று வேண்டுவேன்.

இவ்வாறு கதறிக் கதறி அழுத பிறகு என்னுடைய மனம் மறுபடியும் பரவச நிலை அடைந்துவிடும்.


இந்த உலகமும் உடலும் எனக்கு அற்பமாகத் தோன்றும். அன்னையின் தரிசனம் மட்டுமே ஆறுதல் அளிக்கும் என்றார்.

இதனால் ராமகிருஷ்ணருக்குச் சித்த பிரம்மை பிடித்து விட்டதாகவே எல்லோரும் கருதினார்கள். தாயார் சந்திராதேவி மிகவும் கவலை அடைந்தார்.

பிரபல ஆயுர்வேத வைத்தியர் கங்கா பிரசாத் சென் சிகிச்சை அளித்தார். சிகிச்சையினால் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

கடைசியாக ராமகிருஷ்ணரின் முதல் குருவாகிய பைரவி பிராம்மணி அம்மையார் உலகத்தாரால் பைத்தியக்காரத்தனம் என்று கருதப்பட்ட செயல்கள் மிக உன்னத பக்தியாகிய மகா பாவத்தின் அறிகுறிகள் என்று நிரூபித்தார்.

இத்தகைய அறிகுறிகள் அவதார புருஷர்களிடம் மட்டும்தான் காணப்படும் என்று கூறினார்.



ராமகிருஷ்ணர் ஒரு அவதார புருஷர் என்பது பின்பு வேறொரு சம்பவம் மூலம் வெளிப்பட்டது.

ஒரு நாள் ராமகிருஷ்ணர் தன் அறைக்கு முன் உள்ள வராந்தாவில் உலாவிக் கொண்டிருந்தார். மதுர்பாபு, கோவிலை ஒட்டிய தனது அறையில் இருந்து வெளியே பார்த்துக் கொண்டிருந்தார்.

ராமகிருஷ்ணர் நடப்பது அவரது கண்களுக்குத் தென்பட்டது. மதுர்பாபு பார்த்துக் கொண்டிருக்கும் போதே ராமகிருஷ்ணரின் உடல் மறைந்து அன்னை காளிதேவியின் உருவம் தெரிந்தது.

கண்களை அகலத்திறந்து மதுர்பாபு நன்கு பார்த்தார். அவருக்கு எந்த சந்தேகமும் இல்லை. ராமகிருஷ்ணர்தான் காளியாக மாறி காட்சி அளித்தார் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டார்.

மற்றொரு சம்பவமும் ராமகிருஷ்ணர் ஒரு அவதாரப் புருஷர் என்பதை உறுதிப்படுத்தியது.

ஒரு நாள் மதுர்பாபு ராமகிருஷ்ணருடன் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார்.

அப்போது மதுர்பாபு “இயற்கையைப் படைத்த இறைவனாலேயே இயற்கையின் திட்டத்தை மாற்ற முடியாது” என்று கூறினார்.

“இறைவன் நினைத்தால் எதையும் செய்ய முடியும்” என்று ராமகிருஷ்ணர் பதில் கூறினார்.

செந்நிறப்பூ பூக்கும் செடி வெண்ணிறப் பூக்களை உண்டாக்குவதில்லை. அப்படி வெண்ணிறப் பூக்களை உண்டாக்கினால் நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று மதுர்பாபு பதில் சொன்னார். பிறகு சில நாட்கள் சென்றன.

அதே செடியில் ஒரே கிளையில் வெள்ளை நிறப்பூவும், சிவப்பு நிறப்பூவும் பூத்திருப்பதை ராமகிருஷ்ணர் மதுர்பாபுவுக்குச் சுட்டிக்காட்டினார்.

இந்த அதிசயத்தைப் பார்த்த மதுர்பாபு ஆச்சரியத்தில் உறைந்து போனார். பகவான் ராமகிருஷ்ணர் காளியின் அவதாரமே என்பது அவருக்கு நன்கு புலனாகியது.

“பஞ்சின்மெல்லடியாள் பங்கநீ அல்லால்
    பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத்து அரசே
    திருப்பெருந் துறை உறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
    அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
    வருக என்று அருள் புரியாயே.” (திருவாசகம் பா.453)

- சிவலோகத்துக்கு அரசனே!
- திருப்பெருந் துறையில் எழுந்தருளி இருக்கும் சிவனே!
- பஞ்சு போன்ற மென்மையான அடியினை உடைய உமை பங்கனே!
- உன்னைத தவிர எனக்கு வேறு பற்று இல்லை.
- மிகவும் செம்மையாக என்னை ஆட்கொண்டாய்.
- நீ ஆட்கொண்டு அளித்த திருவருளை மயக்க அறிவால் மறந்து நாயேனாகிய நான் பயம் கொண்டு இருக்கிறேன்.
- இங்கு வாழ எனக்குப் பிடிக்கவில்லை. என்னை வருக என்று அழைத்து அருளுவாயகா!

## இறைநிலை உணர்ந்தால் முழுமை - வேதாத்திரியம்

“இறைநிலையுணர்ந்து கொண்டேன்
  என்அறிவு அதுவாய்க் கண்டேன்
இருநிலை இருப்பியக்கம்
  இணைந்து வான் காந்தமாக

மறைபொருளாய் ஆகாச
  மாவெளி நிறைந்து ஆற்றும்
மனிதர்கள் சொல்கட் கேற்பு
  மதிப்புள நேர்மையான

நிறைவள விளை வளிக்கும்
  நேர்மையும் விளங்கிப் போச்சு
நிலவுல கெங்கும் மக்கள்
  நெறியுடன் வாழ்வதற்கு


முறை பாலவாய் விரிந்து
  முன்னேறும் தொழில் விஞ்ஞானத்தோடு
இறை நிலை அறம் விளக்கம்
  என்தொண்டு வாழ்க்கைக் கல்வி.” (ஞாக.பா.1714)

இறைநிலையை உணர்ந்தால், உணர்ந்து கொண்ட பின் இறைநிலையொடு இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்காமல் பாதுகாத்து வந்தால், ஆனந்தம் தானே?

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் வாழத் தெரிந்திடில் ஆனந்தமே.

# 7. நீ நானாகக் கண்டேன்

தாயுமானவர்! சிவபெருமானின் பெயரைதான் அந்தக் குழந்தைக்குச் சூட்டியிருந்தார்கள். அதுவும் சிவன் மீது மிகுந்த பக்தியுடன் வளர்ந்தது.




இளவயதில் ஒருநாள் தாயுமானவர் ஆலயத்தில் அமர்ந்து இறைவனை நோக்கித் தியானம் செய்து கொண்டிருந்தார். அப்படியே அந்த ஆனந்தத்தில் மூழ்கிவிட்டார் அவர்.

சுற்றியுள்ளது எதுவும் அவருக்குத் தெரியவில்லை. நெடுநேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை என்பதால், எல்லாரும் அவரைத் தேடத் தொடங்கினார்கள்.

நிறைவாக அவரை ஆலயத்தில் கண்டறிந்தார்கள், 'ஏன் எந்நேரமும் இப்படியே உட்கார்ந்திருக்கிறாய்? வீட்டுக்கு வா, மற்ற வேலைகளைக் கவனி' என்று அவர்கள் கேட்க, தாயுமானவர், 'சிவபெருமானை நினைப்பதையன்றி வேறு என்ன வேலை நமக்கு?' என்றே எண்ணியிருப்பார்!

'எல்லாம் சிவன் செயல் என்றுஅறிந்தால்,
அவன் இன்அருளே
அல்லால் புகல்இடம் வேறும்உண்டோ? அதுவே நிலையா
நில்லாய், உன்னால் தமியேற்குக் கதிஉண்டு இந்நீள்நிலத்தில்,
பொல்லா மயக்கத்தில் ஆழ்ந்து
ஆவதுஎன்ன புகல்நெஞ்சமே!'

நெஞ்சே, பொல்லாத மயக்கத்தில் ஏன் ஆழ்கிறாய்? அதனால் என்ன கிடைத்துவிடும்? இங்கே நடப்பவை அனைத்தும் சிவன் செயல் என்று அறிந்துகொண்ட பிறகு, அவனுடைய இன்னருளைத்தவிர நாம் சேர்வதற்கு வேறு இடமுண்டா?

ஆகவே, சிவனின் திருவடிகளே கதி என்று நிலையாக நில், அதனால், வேறு துணையில்லாத தனியனாகிய எனக்கு

இவ்வுலகத்தில் நற்கதி கிடைக்கும்! எப்போதும் இறை சிந்தனையில் இருந்தவர் தாயுமானவர்.

உலகக் கடமைகள், திருமணம் போன்ற குடும்பத் தேவைகளை நிறைவேற்றினாலும், ஒருகட்டத்தில் தன் குருநாதரிடம் உபதேசம் பெற்றுத் துறவறம் பூண்டார்.

தமிழை ஆழ்ந்து கற்ற தாயுமானவர் தனது பக்தியுணர்வை அழகிய பாடல்களாகப் பாடினார். அவை வாசிக்க எளியவையாகவும் சிவபெருமானின் பெருமைகளைப் போற்றும் வண்ணமும் அமைந்தன.

‘சோதியாய் இருள்பிழம்பைச் சூறையாடும்
தூவெளியே, எனைத் தொடர்ந்து தொடர்ந்து
எந்நாளும்
வாதியா நின்ற வினைப்பகையை வென்ற
வாழ்வே, இங்கு உனைப்பிரிந்து
மயங்குகின்றேன்,
மயக்குறும் என்மனம் அணுகாப்
பாதை காட்டி,
வல்வினையைப் பறித்தனையே,
வாழ்வே, நான் என்
செயக்கடவேன்? செயலெலாம்
நினதே என்று
செங்கை குவிப்பேன், அல்லால்
செயல்வேறில்லை.’

பிரகாசமான சோதியாக, இருள் பிழம்பை அழிக்கின்ற தூயவெளியே, என்னைத் தொடர்ந்து வந்து என்றென்றும் துன்பம் தருகிற வினைகளை வென்ற என் வாழ்வே, இங்கே உன்னைப் பிரிந்து நான் மயங்குகிறேன், என் மனத்துக்கு வழிகாட்டி, என் வல்வினையைப் பறித்தவனே, என் வாழ்வே, நான் இப்போது என்ன செய்வேன்?

‘எல்லாம் நின்செயல்’ என்று கைகள் குவித்து
உன்னை வணங்குவேன், மற்றபடி நான் செய்யக்கூடியது
ஏதுமில்லை!

‘சும்மா இரு’ என்று சாதாரணமாகச் சொல்வார்கள், இருப்பதிலேயே அதுதான் கடினம் என்றார் தாயுமானவர். அதற்கு அருள் செய்யச் சொல்லி இறைவனை வேண்டினார்:

மாணிக்கவாசகரோ “இறைவன் திருவருள் கிடைக்காவிட்டால் இந்த உலகில் வாழமாட்டேன். என்னை வருக என்று அழைத்து அருளுவாயகா” என்று வேண்டினார்.

“பரிதிவாழ் ஒளியாய் பாதமே அல்லால்
 பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திரு உயர்கோலச் சிவபுரத்து அரசே
 திருப்பெருந் துறை உறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்து உளம் உருகிக்
 கலந்துநான் வாழுமாறு அறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
 வருக என்று அருள் புரியாயே.” (திருவாசகம் பா.454)

- வீட்டுலகம் எனப்படும் அழகிய சிவலோகத்துக்கு அரசனே!
- திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் சிவனே!
- சூரியனில் ஒளியாய் விளங்குபவனே!
- உன் திருவடிப் பற்று தவிர வேற ஒரு பற்றும் எனக்கு இல்லை.
- உன்னுடைய திருவருளை எதிர்பார்த்து, உள்ளம் கசிந்து உருகி, உன்னோடு கலந்து வாழும் அறியாமை உடைய நான், இவ்வுலகில் வாழ மாட்டேன். என்னை வருக என்று அழைத்து அருளுவாயாக!

## நீ நானாகக் கண்டேன் – வேதாத்திரியம்

“இறைவா! நான் எனைவிடுத்து உனை மதித்தேன்!

எவரெவரோ புனைந்த கற்பனைகள் கொண்டு,
நிறைவில்லை. என்அறிவோ நிலைக்க வில்லை.
நேர்வழியோ புரியவில்லை. நினைந்து ஆழ்ந்தேன்.
மறைபொருளாய் இயங்கும் எனதறிவைப் பற்றி
நானுணர்ந்தேன். அங்குநீ நானாய்க் கண்டேன்.
உறைந்து விட்டேன் உன்னில்நான். உணரந் துணர்ந்து
உலகு இதை உணர்ந்துய்யத் தொண்டு ஏற்றேன்." (ஞாக.பா.739)

பிரம்மமே மனிதனாக வந்துள்ளது தன்மாற்ற சரித்திர உண்மை. மனிதர்களை நடமாடும் தெய்வங்கள் என்றது திருமந்திரம்.

இறைவனே நாமாக இருக்கிறோம் என்ற விளக்கம் பெற்ற நிலையில் இனிமையாக வாழ்வோம்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 8. பற்று அற்ற வாழ்வுக்கு வழி

1865ம் ஆண்டு — இன்றைக்கு சரியாக 155 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சி. கதாதரை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சராக உலகுக்கு அறிவித்தது!

1836ல் கமார்புகூரில் அவதரித்த குழந்தைக்கு கதாதர் என விஷ்ணுவின் பெயரை வைத்து செல்லமாக கதாய் என்று அழைத்தனர் அவரது பெற்றோர்.

தக்ஷிணேஸ்வரத்தில் உள்ள ராதாகாந்த் கோவில் சந்நிதிக்கு கதாதரும் அடுத்துள்ள காளியன்னையின் சந்நிதிக்கு அவரது மருமான் ஹ்ருதய் என்பவரும் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டனர்.

கதாதரின் பூஜை வழிபாட்டு முறையை கவனிப்போர் அவரை ஒரு முழுப் பைத்தியம் என்றே முடிவு கட்டினர்!

சந்நிதியில் விக்ரஹத்துக்கு முன்னால் நின்று கொண்டு ஏதோ பேசுவதும் திடீரென ஆடிப் பாடுவதும் சிரிப்பதும் அழுவதும் கண்டோர் மனத்தில் ஏளனமும் எரிச்சலும் ஊட்டின!

ஆனால் கோவிலைக் கட்டி பராமரித்து வந்த ராணி ராஸ்மணி அம்மைக்கும் அவரது மாப்பிள்ளை மாதுர் பிஸ்வாஸ் அவர்களுக்கும் இவர் ஒரு தெய்வப் பிறவியே என்று தெரிந்தது.

இருப்பினும் கொஞ்சம் சந்தேகத்துடன் ஒரு பரீட்சை செய்தனர். அழகிய விலை மாதர்களை கூடி வந்து அவரை நெருங்கச் செய்தனர்.

என்ன அதிசயம்! ஒரு பேரொளி அவரிடமிருந்து கிளம்பி அந்த விலை மாதர்களின் உடலில் பாய்ந்து அவர்களையும் பரவச நிலையில் ஆழ்த்தியது !

ஸ்ரீ ராமகிருஷ்ணர் முதலில் கிருஷ்ண பக்தராக இருந்தாலும் ஒருமுறை காளி சந்நிதியில் ஏற்பட்ட அனுபவத்தால் பரவசமுற்று அங்கேயே நிலைத்துவிட்டார்!

அன்னைக்கு நிவேதனம் செய்ய கையில் கொஞ்சம் பாயசம் எடுத்து அவளது வாயருகே அவர் கொண்டு போனதும் அது பார்ப்பவர் கண்களுக்கு மறைந்து விடும்!

ஆனால் அவருக்கு மட்டுமே அன்னை வாய்திறந்து உண்பது தெரியும்! அதில் மகிழ்ந்து குழந்தைபோல சிரிப்பார்! சாதாரணமாக உலகில் ஒரு குழந்தைக்கு அதன் அன்னை ஊட்டும் காட்சிபோல இருக்கும்!

மெள்ள மெள்ள மக்களுக்கும் இது புரிந்தது! அவரை அவர் போக்குப்படியே விட்டு விட்டார்கள்.

ஒருமுறை கோவில் தாழ்வாரத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த இவரை மாதுர் பிஸ்வாஸ் பார்த்தார்.

அவர் முன்னே போகையில் (பின்புறம்) சிவனாரைப் போலவும் திரும்பி வரும்போது காளி ரூபமாகவும் கண்டு அரண்டு போனார்!

உடம்பு நடுங்கியது. வியர்த்துவிட்டது! ஓடிச்சென்று ராமகிருஷ்ணர் கால்களில் விழுந்து அழுதாராம் மாதுர்!

ராமகிருஷ்ணருக்கோ ஒன்றுமே புரியாது விழித்தாராம்!

இன்னொருமுறை ஒரு மரத்தடியில் ஹனுமத் உபாசனையில் நிலைநின்ற அவர் உடலில் ஆஞ்சநேய சக்தி பாய்ந்து ஒரே தாவில் அவர் மர உச்சிக்கே போய் அமர்ந்தாராம்!

பின்பு சுயநினைவு வந்து தான் இருக்கும் இடம் அறிந்து பயந்து போய் கத்தினாராம்! மக்கள் எப்படியோ அவரை பத்திரமாக கீழே கொண்டு வந்தனர்! இதுபோல பல நிகழ்ச்சிகள்.

த்வைத(பக்தி) மார்க்கத்திலும், யோக மார்கத்திலும் மட்டுமே நின்ற இவருக்கு அத்வைத அனுபவமும் (நிர்விகல்ப சமாதியும்) கைகூடவேண்டும் என அன்னை விரும்பினாளோ?

பஞ்சாபிலிருந்து பெரிய அத்வைத சித்தாந்தி தோதாபுரி என்பவரை இங்கே காளி அனுப்பினாள்! அவர்மூலம் ராமகிருஷ்ணர் சமாதிநிலை பெறும் வழியை அறிந்தார்.

மூன்று நாள்கள் நீர்கூட அருந்தாது நிர்விகல்ப சமாதியில் நின்றார். குரு தோதாபுரியாருக்கே அதிசயமாக இருந்தது. எப்படி இத்தனை சீக்கிரம் இவருக்கு சாத்தியமாயிற்று?

அதை அறிய ஓரிரவில் அக்னிமூட்டி தியானத்தில் நின்றார் தோதாபுரியார். அப்போது அவருக்கு காளி தரிசனமும், ஒரு மரத்திலிருந்து கறுத்த பெரிய பிசாசு ஒன்று இறங்கி வேகமாய் சென்று மறையும் காட்சியும் கிடைத்தன. அது சிவ கணங்களில் ஒன்று என்றறிந்தார்.

இதில் ஒரு விஷயம் அவருக்குப் புரிந்தது! சுத்த பக்தி மார்க்க த்தில் (த்வைத பாவனையில்) ராமகிருஷ்ணர் முன்னேறி இருந்ததாலேயே அவருக்கு அத்வைத அனுபவம் எளிதில் கிட்டியது என்று!

சீக்கிரமே ராமகிருஷ்ணர் தொடர்ச்சியாக ஆறு மாதகாலம் உடல் உணர்வற்று நிர்விகல்ப சமாதியில் நின்றார். இது 1865ம் ஆண்டு ஆகும். எனவே அவரை பரமஹம்சர் என்று எல்லோரும் போற்றினர்.

அன்றிலிருந்து இன்று சரியாக 155 ஆண்டுகள் நிறைவடைந்தன. தனது 29வது வயதில் இவர் பெற்ற அத்வைத அனுபவ நிலையை பல மகான்கள் (சித்தபுருஷர்கள்) தங்கள் வாழ்வில் பெற்றுள்ளனர்.

குறிப்பாக சதாசிவ பிரம்மேந்திரர், சமீபத்தில் பகவான் ரமணர், காஞ்சி மகான் ஆகியோர். இவர்களெல்லாம் த்வைத பக்தி மார்கத்தில் நின்று, அதாவது பூஜை வழிபாடு முதலியவற்றை கருத்துடன் செய்து, அதன்மூலம் அத்வைத நிலையை அடைந்தவர்கள்.

அத்வைத ஸ்தாபகரான ஆதி சங்கரரே சிவ பூஜை, நாராயண ஸ்ம்ருதி, மடங்களை நிறுவுதல் போன்ற த்வைத வழியில் சென்றவர் தானே!

அதேபோல த்வைத ஸ்தாபகரான மாத்வாச்சார்யர் கடைசியில் அத்வைத நிலையை அடைந்தாரே!

உடுப்பியில் அவர் பாகவத சப்தாஹம் செய்து முடித்தபின் மகாமங்கள ஆரத்தி எடுக்கையில் திடீரென மறைந்து ஒரு பெரிய புஷ்பக் குவியல் ஆகிவிட்டார்! எல்லோரும் ஓடிவந்து அதனுள் தேடினர். பூத உடலோடு அவர் மறைந்து வாயுஸ்வரூபமாக ஆனார்.

எல்லோருடைய மூச்சுக்காற்றாக (வாயுரூபமாக) என்றும் எங்கும் இருப்பதால் அவருக்கென்று தனி கோவிலோ,

சமாதியோ(ப்ருந்தாவனமோ) ஒன்றும் கிடையாது! அத்வைத நிலை அதுவே!

இதையெல்லாம் சற்று நாம் யோசித்தால் த்வைத–அத்வைத பேதமெல்லாம் அர்த்தமற்றது என விளங்கும்.

சமுத்திரத்தின் ஆழ்நிலையில் வங்கக் கடல், இந்துமகா கடல், அரபிக் கடல் என்ற பேதம் ஏது?

இந்த மகான்களைப் போல பற்றை விட்டால் இறையுணர்வு தானாகவே இயல்பாக அமைந்துவிடும் என்பதை திருவாசக பாடல் சொல்கிறது.

"பந்தனை விரலாள் பங்கநீ அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந் துறை உறை சிவனே
அந்திமில் அமுதமே அரும்பெரும் பொருளே
ஆரமுதே அடியேனை
வந்துய்ய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே." (திருவாசகம் பா.455)

- சிவந்த நெருப்பு போன்ற மேனி உடையவனே!
- சிவலோகத்துக்கு அரசனே!
- திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் சிவனே!
- முடிவில்லாத இன்பம் தரும் அமுதமே!
- அரிய பெரிய பொருளே!
- பந்து போன்ற விரலை உடைய உமை பங்கனே!
- உன்னைத் தவிர எனக்கு வேறு பற்று இல்லை.
- நான் உய்யுமாறு என்னை ஆட்கொண்டாய்.
- இங்கு வாழ எனக்குப் பிடிக்கவில்லை. என்னை வருக என்று அழைத்து அருளுயுவாயகா!.

## பற்று அற்ற வாழ்வுக்கு வழி காட்டுகிறது வேதாத்திரியம்.

"பற்றற்று எல்லோரும் வாழ வென்றால்,
பலர் கூட்டு முயற்சியினால் அன்றி ஆகா.
உற்றுற்று ஆராய்ந்தேன் உறக்கம் விட்டும்.
உலக சமாதானமது, பாசம் பந்தம்
அற்றஒரு புது புரட்சிகர திட்டத்தால்
அன்றி அதுகிட்டாது நிலைத்திடாது
கற்றவர்கள் ஆராய்வீர்! நுணுக்க மாகக்
கருத்தினிலே எழும் சிக்கல் எடுத்துரைப்பீர்." (ஞாக.பா.966)

தனி மனித வாழ்வு இனிமையாகவும், சமுதாயம் வளம் உயர்ந்தும் இருக்க வேண்டும்.

ஆனால் பல பிறவிகளில் தொடர்ந்து வந்த பழக்கத்தால் தனி மனிதர் பொருள் உடைமையால் பொருள் பற்றும் மக்கள் பாசமும் ஏற்பட்டு, மனிதர்களில் பிரிவுகள் உருவாகி இனிமை கெட்டு விட்டது.

பற்றுக்களிலிருந்து விடுபட்டு மனிதன் ஆன்ம சுதந்திரத்துடன் வாழ வேண்டும்.

பலரது கூட்டு முயற்சியினால் தான் பற்றிலிருந்து விடுபட முடியும்.

கூர்ந்து கவனித்து, தூக்கத்தையும் தவிர்த்து ஆராய்ந்தேன்.

பாச பந்தம் இல்லாத ஒரு புதிய புரட்சிகரமான திட்டத்தால் அன்றி உலக சமாதானம் என்பது கிடைக்காது. நிலைக்காது.

கற்றறிந்து அறிஞர் பெருமக்கள் பாசபந்தம் அற்ற வாழ்வை நடைமுறைப்படுத்துவது பற்றியும், அதனால் விளையும் நலன்களையும் எதிர் கொள்ள வேண்டிய நுட்பமான சிக்கல்களையும், அதற்கான தீர்வுகளையும் எடுத்து உரைக்க வேண்டும்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 9. தவமும் பரவச நிலையும்

இது! 1868ம் ஆண்டு. தக்ஷிணேஸ்வரத்திலிருந்து எல்லோருடன் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் காசிக்கு ரயில் பயணம் செய்தார்.

மாதுர் பிஸ்வாஸ் தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

தியோகார் ஸ்டேஷனில் ரயில் நின்றது. அங்கு வாழும் மக்களின் மிக வறுமையான சூழ்நிலை கண்டு வருந்தி மாதுரிடம் சொல்லி ஏழைகளுக்கு அன்னதானம் செய்வித்தார்.

காசி மணிகர்ணிகா மயானத்தில் சிவனாரும் காளியும் எரியும் உடல்களிலிருந்து ஜீவனைக் கரையேற்றும் கருணைச் செயலைக் கண்டு பரவசநிலை அடைந்தார்.



அச்சமயம் அவர் ஒரு படகில் நடுகங்கையில் இருந்தார். தான் இருக்கும் இடம் ஒன்றும் அறியாது பரவசநிலையில் ஆடிப் பாடத் தொடங்கினார்.

அருகில் இருந்தவர்கள் அவரை அமரச் செய்தனர். அவர் மகிமை தெரியாதவர் அவரை ஒரு பைத்தியம் என்றே நினைத்தனர்.

தற்காலத்தில் பல ஏமாற்றுப் பேர்வழிகள் "பரவசம்" (ஆவேசம்) வந்ததுபோல நடித்து பாமர மக்களைக் கவர்வதையும் பார்க்கத்தான் செய்கிறோம்.

அந்தமாதிரி “குருமார்கள்” வீசும் வலையில் வீழாது பரமஹம்சர், ரமணர், வேதாத்திரி மகரிஷி போன்ற தூயவர்களையே குருவாகக் கொண்டாலே போதுமே!

காசியில் ராமகிருஷ்ணருக்கு பூரி ஜகன்னாதர் தரிசனமும் கிடைத்தது. மீண்டும் பரவச நிலை அடைந்தார்.

இத்தகைய பரவசநிலையில் மாணிக்கவாசகரும் “வாழ்கிலேன் கண்டாய் வருக என்று அருள் புரியாயே” என்று திருவாசகத்தில் பாடுகிறார்.

“பாவநாசாவுன் பாதமே அல்லால்
    பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர் தந்தேவே சிவபுரத்து அரசே
    திருப்பெருந் துறை உறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
    முழங்கு அழலாய் நிமிர்ந்தானே
மாஉரி யானே வாழ்கிலேன் கண்டாய்
    வருக என்று அருள் புரியாயே.” (திருவாசகம் பா.456)

- தேவர்களுக்கும் மேலான மகா தேவனே!
- சிவலேகத்துக்கு மேல் கீழ் நடு என்ற மூவுலகங்களிலும் ஊடுருவி இருவர் கீழும் மேலுமாய் தேட, முழங்கி எரியும் நெருப்புத் தூணாய் நின்றவனே!
- யானைத் தோலை மேலாடையாகப் போர்த்தவனே!
- தீயவினைகளை அழிப்பவனே!
- உனது திருவடி தவிர எனக்கு வேறு பற்று ஒன்றும் இல்லை.
- எனக்கு இங்கு வாழப் பிடிக்கவில்லை. என்னை வருக என்று அழைத்து அருளுவாயாக!

“இறைநிலையில் அவன்என்னை ஈர்த்தபின்னர். மொழியில்
    எழுதுகின்ற மறையையான் படிக்கின்றேன். விந்தை!

மறைபொருளாய்த் தான்மாறும் மாபெரிய அறிவு
    மக்கள் அனைவர்க் குள்ளும் இயல்புஇது ஆன்ம
துறையில் விரும்பம் வந்தோர், தொட்டுக்காட்ட வல்ல
    சுத்தமான தவஆசான் துணைகொண்டு, நல்ல
முறையாக தவம்ஆற்ற, மும்மலம் கரைந்து,
    முழுமை பெறலாம். அறிவில் முயற்சியோடு செய்வீர்!"
(ஞாக.பா.730)

இயற்கையின் பெருமைகளை, சிறப்புக்களை, விளைவுகளை உணர்ந்து கொள்ள மனிதன் எடுக்கும் முயற்சியில் மன அலைச்சுழல் விரைவைக் குறைத்து,

அலைகள் நிலையாக அதுவே அறிவாக, அதையே தானாக, அவ்வறிவாக இருக்கும் பேராற்றலே

எல்லாம் வல்ல இறைவெளியாக உணர்ந்து முழுமை பெறும் முயற்சிதான் தவம் ஆகும்.

இத்தகைய தவத்தை நாள்தோறும் இயற்றி வந்தால், இறைநிலையை அகக்காட்சியாகப் பெற்று உணர்ந்து  வாழலாம்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.  வாழ்க வளமுடன்.

## 10. வாழப் பிடிக்கவில்லையா?

1870: கல்கத்தாவில் குலூதலா என்ற இடத்தில் ஒரு வீட்டில் 15ம் நூற்றாண்டில் வாழ்ந்த மகான் ஸ்ரீ சைதன்ய மகாபிரபு உபயோகித்த ஆசனம் வைக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீ வைஷ்ணவ பக்தர்களால் ஆராதிக்கப்பட்ட அங்கு பஜனை நடைபெறும்போது ராமகிருஷ்ண பரமஹம்சர் சென்றார்.

அந்த ஆசனத்தை பார்த்தவுடன் திடீரென சைதன்ய சக்தி அவருள் பாய்ந்து தன்னையே மறந்து நேரே ஓடிச்சென்று அதன் மேலே ஏறி நின்று கைகளை உயர்த்தினார்!

எல்லோரும் திடுக்கிட்டனர். பெருத்த ஆட்சேபணை எழுந்தது! அவரைப் பிடித்து அப்புறப்படுத்தினர். வசைமாரி பொழிந்தது!

நினைவு திரும்பியதும் தான் செய்த காரியத்தை உணர்ந்து மிகவும் வெட்கப்பட்டார்! வெட்கம் தாங்காமல் ஒரு துணியால் தன் முகத்தை மூடிக் கொண்டாராம்!

ஆனால் மடத்து தலைவர் இது ஏதோ தெய்வச் செயல் என்று தெரிந்து அவரிடம் சில கேள்விகள் கேட்டார். இவர் அளித்த பதில்களை வைத்து நிஜமாகவே ராமகிருஷ்ணர் ஒரு தெய்வப் பிறவிதான் என்பதை அறிந்தார்.

பிறகு ஒருமுறை ஸ்ரீ சைதன்யர் பிறந்த ஊரான நதியாவுக்கு பரமஹம்சர் சென்றார்.

தற்போதைய நதியா ஊரில் அவருக்கு ஒரு அனுபவமும் வரவில்லை. அனால் அருகே உள்ள கங்கையை படகில் கடக்கும் போது (நடு ஆற்றில்) அவருக்கு பரவச நிலை கிடைத்தது.

இதிலிருந்து அன்று சைதன்யர் வாழ்ந்த நதியா இன்று நதிக்குள் மூழ்கிவிட்டது என்று நமக்கு புரிகிறது!

1871: அன்னை சாரதா தேவியார் (வயது 18) தன் பிறந்த ஊரான ஜயராம்பாடியிலிருந்து தன் தந்தையுடன் தக்ஷிணேஸ்வரம் வந்து சேர்ந்தார்.

அத்தனை தூரமும் அந்தக் காலத்தில் வசதிக் குறைவால் நடந்துதான் வரவேண்டும். சிரமத்தினால் வழியில் ஜுரம் கண்டு ஒரு மரத்தடியில் படுத்துவிட்டார்.

அப்போது ஒரு தேஜஸ்வியான மூதாட்டி அவளை நெருங்கி தடவிக் கொடுத்து ஜுரத்தைப் போக்கினாள்! பின்மாயமாய் மறைந்தாள்!

அன்னை காளியே அவள் என்பது புரிந்தது. அதே சமயம் தக்ஷிணேஸ்வரத்திலிருந்த பரமஹம்சருக்கு சாரதாவின் நிலைமை ஞான திருஷ்டியில் தெரிந்து அன்னை காளியை வேண்டினாராம்!

பரமஹம்சரும் சாரதாவும் சந்திக்கையில் இருவர் உள்ளத்திலும் தெய்வ சக்தி பாய்ந்ததால் அப்படியே இருவரும் சமாதி நிலையில் மறுநாள் காலை வரை அமர்ந்து விட்டார்களாம்!

இவருக்கு அவள் காளியாகவும் அவருக்கு இவர் சிவனாராகவும் தெரிந்தது போலும்! சாதாரணமான நமக்கு இதெல்லாம் புரியவே புரியாது! காலையில் முதலில் ராமகிருஷ்ணருக்குத் தான் உலக உணர்வு வந்து சாரதாவை உலுக்கி எழுப்பினார்.

1873: பைபிளை நன்கு கற்று தேர்ந்தார் ராமகிருஷ்ணர். முடிக்கையில் ஜீசஸ் அவரது சீடர்களுடன் இவருக்கு தரிசனம் அளித்தார்! பரவச நிலை மீண்டும் கூடினார்!

அப்போது சாரதா கமார்புகூரில் ராமகிருஷ்ணர் குடும்பத்தாருடன் இருந்தார். சிலநாட்களில் அவர் திரும்பி வரும்போது மாலைவேளை. இருட்டிவிட்டது. அதுவோ ஒரு காட்டுப் பிரதேசம்.

ஒரு திருடன் தம்பதிகள் இவரைப் பிடித்துக் கொண்டனர். ஆனால் அவர்களுக்குள்ளே ஒரு இனம் புரியாத சக்தி பாய்ந்து மனம் மாறச் செய்தது.! சாரதாவை பத்திரமாக கொண்டு வந்துவிட்டனர்.

இதுவும் நிஷ்டையில் பரமஹம்சருக்குத் தெரிந்ததாம்! வால்மீகி மகரிஷி ஞானம் பெறும் முன்பு திருடனாக இருந்து மனம் மாறியதுபோல இவர்களும் பக்தர்கள் ஆகிவிட்டார்களாம்!

1875: மிக நோய்வாய்பட்டு சாரதா தேவியார் (வயது 22) அநேகமாக இறக்கும் நிலையில் இருந்தார். மஹாகாளியை தியானித்து அவளுக்கு புத்துயிர் ஊட்டினார் ராமகிருஷ்ணர். தாயும் ஆனவர் என்றே சொல்லலாம்!

எப்படி அனுமன் அசோகவனத்தடியில் உயிரை மாய்த்துக் கொள்ள சித்தமாக இருந்த சீதைக்கு ராமநாம ஜெபத்தால் உயிர் ஊட்டிய தாயாகி நின்றாரோ அதுபோல!

வங்காளத்தில் இருந்த சமயம் நாடகக் கலை அவ்வளவாக பிரபலம் ஆகாத கால கட்டம். கிரீஷ் என்பவரின் ஸ்டார் தியேட்டர் ஒன்றே ஆன்மீக நாடகங்களை **அருமையாக** நடத்தி வந்தது. அதன் பக்த பிரஹலாத நாடகத்தைக் காண ஆவலுடன் ராமகிருஷ்ணர் சென்றார். அங்கேயும் அவருக்கு பரவச நிலை வந்தது!

அதைக் கண்ட கிரீஷுக்கு ஒரு பெரும் மன மாற்றம் ஏற்பட்டது. பெரும் குடிகாரராகவும், பிறமாதர் தொடர்பு உடையவராகவும் இருந்த கிரீஷ் அன்று முதல் கெட்ட பழக்கங்களை அறவே ஒழித்தார்.

எனவே இன்றுகூட அதை சமுதாயத்துக்கு உணர்த்தும் வகையில் வங்காள நாடகங்களின் தொடக்கத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் போட்டோ வைத்து மாலையிட்டு வணங்குகின்றனர்.

இத்தகைய பரவச நிலையில் தான் மாணிக்கவாசகர் "மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய் வருக என்று அருள் புரியாயே." என்று திருவாசகத்தில் வேண்டுகிறார்

"பழுதில்சொல் புகழாள் பங்கநீ அல்லால்
 பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத்தரசே
 திருப்பெருந் துறை உறைச் சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்

துணைஎன நினைவனோ சொல்லாய்
மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே.” (திருவாசகம் பா.457)

- செழிப்பான சந்திரனை அணிந்திருப்பவனே!
- திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் சிவனே!
- குற்றமற்ற பழம் புகழினை உடைய உமை பங்கா!
- உன்னைத் தவிர வேற பற்று எனக்கு இல்லை.
- மற்ற தேவர்களை வாழ்த்துவேனோ? வணங்குவேனோ? துணை என நினைப்பேனோ? சொல்வாயாக!
- இளம் காளை வாகனனே!
- எனக்கு இங்கு வாழப் பிடிக்கவில்லை. என்னை வருக என்று அழைத்து அருளுவாயாக!

## தவத்தின் உச்சநிலையில் இறையுணர்வு – வேதாத்திரியம்

“உடலினிலே உள்ளஒலி ஒளியைக் காண
உனக்கின்பம் மிகுமெனினும், இதற்கு மேலாய்த்
தொடர்புகொண்டு பலபொருளில் கண்டு விட்டோம்.
சுகமென்ற தத்தனையும் சலிப்பும் கண்டோம்
கட உள் நீ, இவையனைத்தும் அறிந்து தாண்டி,
கருத்தொடுங்கிக் காண்பவனே தனிக்கும் மட்டும்
திடமடைந்து அறிவு லயமாகி நிற்கத்
தெளிவடைவாய், கற்பனைபோம். தேவை முற்றும்.”
(ஞாக.பா.1479)

அகத்தவத்தினாலும் தற்சோதனையாலும் அறநெறி வாழ்க்கையாலும் இறையுணர்வு பெறலாம். இறை உணர்வு பெற்று ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

## வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப் பத்து

YOUTUBE LINKS

1. பற்றற்ற வாழ்வும் முக்தியும் https://youtu.be/9cYRiJKADSI
2. பற்றும் யோக வாழ்க்கையும் https://youtu.be/cLE3FBExkeM
3. உருகிப் உருகி உளம்குளிர https://youtu.be/8esI2dAqXbk
4. அருள் அனுவம் https://youtu.be/H2wzcKSTKIs
5. இறைநிலை என்னுள்ளே https://youtu.be/J6do7u1pQjk
6. அனுபூதி நிலை https://youtu.be/Mh02Xvkg8vs
7. நீ நானாகக் கண்டேன் https://youtu.be/aWREMTg5NPE
8. பற்று அற்ற வாழ்வுக்கு வழி https://youtu.be/miQWheOdT04
9. தவமும் பரவச நிலையும் https://youtu.be/87GmASdc6NI
10. வாழப் பிடிக்கவில்லையா? https://youtu.be/CfRBnGZ6qYk

# துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், சுவாமி சித்பாவனந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
4. இணையதள தகவல்கள்.
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
6. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
7. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை
8. ராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை
9. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.

# பானுகுமார் படைப்புலகம்

(145 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)

4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்

9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.

9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2

3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 119 தலைப்புகளில் vethathiri am Banukumar  vஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்

32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5

67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்

102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108..Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?